17.03.2026 OS.No.227/2018 PW1 Name :.பழனி

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு குறுக்கு விசாரணை

1. என்ன நிவாரணத்திற்காக வழக்கு போட்டுள்ளேன் என்பது தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண்.96/3. பிரதிவாதிகளின் சொத்தின் சர்வே எண். 96/1 மற்றும் 96/2. அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. எங்களுடைய சொத்து தனியாகவும் பிரதிவாதிகளின் சொத்து தனியாகவும் உள்ளது. இருவருடைய சொத்துகளுக்கும் இடையில் சுமார் 5 மீ இடைவெளி உள்ளது. வழக்கு சொத்திற்கான உயில் ஆவணம், செட்டில்மெண்ட் ஆவணம், பட்டா ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளேன்.
2. உயில் ஆவணம் எழுதுவதற்கு எழுதியவருக்கு உரிமை இல்லை என பதில் போடபட்டது என்ற விவரம் தெரியும். அதற்கு மறுப்பு தெரிவித்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்தேன். உயில் ஆவணத்தில் எல்லப்பமேஸ்திரி சாமக்காள் ஆகியோருக்கு சொத்து எவ்வாறு வந்தது என குறிப்பிடபடவில்லை. உயில் ஆவணத்தை பிரகடனபடுத்த தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் உயில் ஆவணம் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல.
3. உயில் ஆவணத்தின் அடிப்படையில் என் தாயார் பெயரில் பட்டா மாறியது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில்

என் தாயார் என் பெயருக்கு எழுதியுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் முந்தைய ஆவணம் தொடர்பாக குறிப்பிபடவில்லை. என் தாயார் பெயரில் உள்ள பட்டா எண் 45 ஆகும். அதை தாக்கல் செய்துள்ளேன். அதில் பிரதிவாதிகளுக்கு கூட்டு அனுபவம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. வழக்கு சொத்தில் உள்ள பிரதிவாதிகளின் கூட்டு உரிமையை மறைத்து பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல.

4. வாரிசு சான்றிதழ் ஆவணங்களின் அசலை தாக்கல் செய்யவில்லை. மின் கட்டண விவரங்கள் என் தாயார் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. தீர்வை வரி ரசீதுகள் என் தாயார் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.73/2014 வழக்கில் நான் தரப்பினராக இருந்தேன். வழக்கில் என்னுடைய தாயார் பெயர் உள்ளது. நானும் பிரதிவாதியாக உள்ளேன். அந்த வழக்கு எந்த சர்வே எண்ணுக்குரியது என்று தீர்ப்பில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு வழிபாதைக்காக பெருமாள் வகையராக்கள் தாக்கல் செய்தார்கள்.
5. பெருமாள் வகையராக்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு நடத்தவில்லை. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் மோசடியானது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்துள்ளேன். அந்த

புகார் மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதில் பற்றிய விவரம் தெரியாது.

6. சில வாரிசுகளை விட்டுள்ளதாக பதிலில் கூறியுள்ளார்கள். வழக்கு சொத்து ஆதியில் சினிகான் என்பருக்கும் தாசிகான், சித்தாயிகான், முனிசாமி ஆகியோர்களுக்கு பாத்தியபட்டது என குறிப்பிட்டுள்ளது தெரியாது. அதன்பின் முனியம்மாள் சின்னம்மாளுக்கு சொத்து பாத்தியபட்டது என்றால் சரியல்ல. குப்பு என்பவரை யார் என்று தெரியாது. முனியம்மாளின் வாரிசுகள் தான் வழக்கு சர்வே எண்ணில் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நாகப்பன் வகையராக்கள் கூட்டு உரிமையாளராக உள்ளார்கள் என்றால் சரியல்ல.

7. பெருமாள் வாரிசுகள் தற்போது வழக்கு சொத்தில் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. சொத்திற்கு என்னுடைய தாயார் முருகம்மாள் வாரிசு இல்லை என்றால் சரியல்ல. உண்மையான வாரிசு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. உயில் ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

8. நீதிமன்ற ஆணையர் வருகையின்போது மழை நின்றுவிட்டது. அச்சமயம் வழக்கறிஞர் பூபதி எனக்காக வந்திருந்தார். அச்சமயம் அவர் அரசு வக்கீல் அந்த சமயத்தில் அவர் அரசு வக்கீலாக இல்லை. சர்வேயர் அளக்கும் அந்த பதவியில் இருந்தார். பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபனையை ஏற்காமல் நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் வழக்கறிஞர்

ஆட்சேபனையை கேட்காமல் சொத்தை அளந்துள்ளார் என்றால் சரியல்ல.

9. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் ஆக்கிரமிப்பு தொடர்பான சர்வே எண்ணை குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. எத்தனை அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக நீதிமன்ற ஆணயைர் குறிப்பிபடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளார். எந்தெந்த சப்டிவிஷன் என்று நியாபகம் இல்லை. நீதிமன்ற ஆணையர் முழுமையான குறிப்புகளை கூறாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ பதிவேட்டில் என்னுடைய தாயார் பெயர் இல்லை என்றால் என்னுடைய தாத்தா பெயரில் உள்ளது.

10. அ பதிவேட்டில் என் தாயார் பெயர் இல்லாததால் சொத்து என் தாயாருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியபட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சரியாக அளவீடு செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு பகுதியை மீட்கவேண்டும் என்ற பரிகாரம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 17/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.17 14:54:25 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.